# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2089/55 - 2018 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2018.09.21

*2089/55 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

NWP/CM/AD/6/8/4.

**வடமேல் மாகாண மாகாண சபை**

*வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்திற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) நிறுவுவதற்கான மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான சாசனத்தின் 13, 15(1) மற்றும் 15(2) ஆம் பிரிவுகளை திருத்தம் செய்தல்*

*இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்ற வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்திற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) நிறுவுவதற்கான மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான சாசனத்தின் திருத்தத்தினை இன்றைய திகதி தொடக்கம் முப்பது நாட்களுக்கு பிறகு வடமேல் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதாக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். எவர் ஒருவருக்கு இச் சாசனத்தின் திருத்த ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் இருந்தால் அதனை அத் திகதிக்கு முன் என்னிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.*

*டீ. ஜீ. பி. எம். தர்மசிறி தசநாயக்க,*
*வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி மற்றும்*
*திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டமும் சமாதானமும்,*
*கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக, வடிகாலமைப்பு*
*மற்றும் சுற்றுலா நடவடிக்கை விடயப் பொறுப்புடைய அமைச்சர்.*

*வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,*
*பொறியியல் சேவை, சட்டமும் சமாதானமும், கல்வி,*
*உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாக, வடிகாலமைப்பு*
*மற்றும் சுற்றுலா நடவடிக்கை விடய அமைச்சு,*
*1 ஆம் மாடி,*
*வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,*
*குருநாகல்.*

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்திற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) நிறுவுவதற்கான மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான சாசனம்.

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்திற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) நிறுவுவதற்கான மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான சாசனத்தின் 13, 15(1) மற்றும் 15(2) ஆம் பிரிவுகளை திருத்தம் செய்தல்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் பெயரான உப அட்டவணை 1 ஆம் (மாகாண சபை) படிவத்தில் 28 ஆம் சட்டத்திற்கமைய கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சாசனத்தில் 13 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்.

சாசனத்தில் 13 ஆம் பிரிவில் தொடர் இலக்கம் 11 தொடக்கம் 12 இன் கீழ் தொடராக காட்டப்பட்டுள்ள "வடமேல் மாகாண தெருக்கள் திணைக்களத்தின் மற்றும் பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் என்ற பந்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார திட்டத்தினை செயற்படுத்துகின்ற உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள்'' என்ற பந்தியினை அகற்றி மாகாண சபைக் குழுவின் அமைப்பு இத்துடன் திருத்தம் செய்யப்படுகின்றது.

சாசனத்தில் 15(1) ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்.

சாசனத்தில் 15(1) ஆம் பிரிவில் உள்ள "இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை" என்ற வார்த்தைக்கு பதிலாக "ஆறு மாதத்திற்கு (06) ஒரு தடவை" என்ற வார்த்தையினையும் "மேலதிக கூட்டம்" என்ற வார்த்தைக்கு பதிலாக "கூட்டம் மற்றும் மேலதிக நபர்கள்'' என்ற வார்த்தையை மாற்றியமைத்து இப் பிரிவு இத்துடன் திருத்தம் செய்யப்படுகின்றது.

சாசனத்தில் 15(2) ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்.

சாசனத்தில் 15(2) ஆம் பிரிவில் உள்ள "பத்து பேர்'' என்ற வார்த்தைக்கு பதிலாக "எட்டு பேர்'' என்ற வார்த்தையை மாற்றியமைத்து இப் பிரிவு இத்துடன் திருத்தம் செய்யப்படுகின்றது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.